# மெட்ரோ ரயிலில் பயணித்த சென்னை பள்ளி மாணவர்கள்



சென்னை மெட்ரோ ரயிலில் இலவசமாக செவ்வாய்க்கிழமை அழைத்துச் செல்லப்பட்ட சென்னை பள்ளி மாணவர்கள்.

**சென்னை, ஜூன் 4:** சென்னை மாநகரின் அழகினை மெட்ரோ ரயிலில் இருந்தபடியே சென்னை மாநகராட்சி பள்ளியைச் சேர்ந்த 300 மாணவ-மாணவிகள் செவ்வாய்க்கிழமை கண்டு ரசித்தனர்.

சென்னை நகரில் மெட்ரோ ரயில் தொடர்பாக அரசு பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் முயற்சியாக மாதந்தோறும் கல்விச் சுற்றுலாவை சென்னை மெட்ரோ ரயில் நிர்வாகம் வழங்கி வருகிறது. இதன் ஒரு பகுதியாக, சென்ட்ரலில் இருந்து பரங்கிமலை வரையும், வண்ணாரப்பேட்டையில் இருந்து விமான நிலையம் வரையும் கல்விச் சுற்றுலாவை மாணவ, மாணவிகள் மேற்கொண்டு வருகின்றனர். இதில், மெட்ரோ ரயிலின் சிறப்பு அம்சங்கள் பற்றி விளக்கப்படுகின்றன.

இந்நிலையில், மெட்ரோ ரயிலில் சென்னை மாநகராட்சியின் சென்னை பள்ளிகளைச் சேர்ந்த 300 மாணவ, மாணவிகள் செவ்வாய்க்கிழமை கல்விச் சுற்றுலா மேற்கொண்டனர்.

இதுகுறித்து மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரி ஒருவர் கூறியது:

மெட்ரோ ரயில்களில் கல்விச் சுற்றுலா மேற்கொள்ள அரசு, மாநகராட்சி பள்ளி, அரசு உதவி பெறும் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு ஏற்பாடு செய்துகொடுக்கப்பட்டுள்ளது. அதன்படி, மெட்ரோ ரயில்களில் 2018-19-ஆம் கல்வியாண்டில் சுமார் 60 பள்ளிகளைச் சேர்ந்த 31 ஆயிரத்து 178 மாணவர்கள் கல்வி சுற்றுலா மேற்கொண்டு பலனடைந்துள்ளனர். பள்ளி மாணவ, மாணவிகள் மெட்ரோ ரயிலில் கல்வி சுற்றுலா மேற்கொள்ள தொடர்ந்து ஏற்பாடு செய்து கொடுக்கப்படும் என்றார் அவர்.